بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 06/05/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு – தொடர் 17

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களைக் குறித்து கடந்த குத்பாக்களில் எடுத்துரைக்கப்படும் போது, படைப் பிரிவுகளை அனுப்பி வைத்தார்கள் என்று கூறப்பட்டது. அதனுடைய சிறிது விளக்கத்தை (இன்று) எடுத்துக் கூறுவேன். இதன் மூலமாக அக்கால சூழ்நிலையின் கடுமை குறித்தும் கொஞ்சமாவது கணிக்கலாம்.

**அனுப்பி வைக்கப்பட்ட 11 படைப் பிரிவுகளில் முதலாவது படைப் பிரிவைப் பற்றிய விபரம்**

11 படைப் பிரிவுகள் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருந்தது. அவற்றில் முதல் படைப் பிரிவின் விபரமாவது; துலைஹா பின் குவைலித், மாலிக் பின் நுவைரா, சஜாஹ் பின் ஹாரிஸ் மற்றும் முஸைலமா கஸ்ஸாப் போன்ற கிளர்ச்சியாளர்கள், முர்தத்கள், பொய் நபித்துவ வாதிகள் ஆகியோரை அழித்தொழிப்பதற்காக அனுப்பப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களிடத்தில் ஒரு கொடியைக் கொடுத்தார்கள். துலைஹா பின் குவைலிதை எதிர்கொள்ள செல்லுமாறு அவருக்குக் கட்டளையிட்டார்கள். அதை முடித்துவிட்டு புதாஹ் எனுமிடத்தில் மாலிக் பின் நுவைராவுடன் போர் செய்யுங்கள்; அவன் போரில் பிடிவாதமாக இருந்தால் மட்டுமே போரிட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள்.

இன்னோர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாபித் (ரலி) பின் கைஸ் அவர்களை அன்சாருடைய அமீராக நியமித்து, அவர்களை ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களின் கீழ் பணியாற்ற வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் (ரலி) அவர்களிடம், பனூ அஸத் உடைய ஒரு நீரூற்றான புஸாகாவுக்கருகில் குடியிருக்கும் துலைஹா, உயய்னா பின் ஹிஸ்ன் ஆகியோரை எதிர் கொள்ளச் செல்லுமாறு கூறினார்கள்.

**அல்லாஹ்வுடைய வாள்களுள் ஒரு வாள்**

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுடன் போரிட ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களுக்காக கொடியைக் கட்டியபோது ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களைப் பார்த்து, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன்; ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் அல்லாஹ்வின் மிகவும் நல்ல அடியார் ஆவார். அவர் நமது சகோதரர் ஆவார். அல்லாஹ், காஃபிர்கள் மற்றும் முனாஃபிக்கள் ஆகியோருக்கெதிராக உருவிய அல்லாஹ்வுடைய வாள்களுள் அவர் ஒரு வாள் ஆவார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின்

வலீத் அவர்களை துலைஹா, உயய்னா ஆகியோரை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அவ்விரு எதிராளிகளின் சுருக்கமான அறிமுகம் எடுத்து வைக்கப்படுகிறது.

**ஜோதிடனாக இருந்த துலைஹாவைக் குறித்தும், உயய்னாவைக் குறித்தும் சுருக்கமான அறிமுகம்**

துலைஹா பின் குவைலித் பின் நவ்ஃபல் பின் நஸ்லா அல் அஸதீ என்பவன் பொய் நபித்துவ வாதம் செய்தவர்களுள் ஒருவனாவான். இவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்வின் இறுதி காலகட்டத்தில் தோன்றினான். அன்னாருடைய வாழ்விலேயே முர்தத் ஆகிப்போனான்; நபித்துவ வாதம் செய்தான்; சமீரா எனும் இடத்தைத் தன் படையின் தலைமையிடமாக ஆக்கிக் கொண்டான்.

அவன் நபித்துவ வாதம் செய்தபோது பொது மக்கள் அவனைப் பின்பற்றலாயினர். மக்கள் வழிகெட்டுப் போக முதல் காரணம் என்னவென்றால், அவன் தன் சமுதாயத்துடன் ஒரு பயணத்தில் இருந்தான். தண்ணீர் தீர்ந்து போய் விட்டதால் மக்களுக்கு கடும் தாகம் எடுத்தது. சாதுர்யமாக செயல்பட்டவாறு அவன் மக்களைப் பார்த்து, நீங்கள் என்னுடைய அஃலால் எனும் குதிரையில் பயணித்து சில மைல் தூரம் சென்றால் உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் என்றான். அவர்களும் அவ்வாறே செய்தபோது அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்தது. இதன் காரணமாக கிராமவாசிகள் இந்தக் குழப்பத்தில் சிக்கிக் கொண்டனர். உண்மைக்குப் புறம்பான அவனுடைய விஷயங்களுள் ஒரு விஷயம் என்னவென்றால், தொழுகையிலிருந்து அவன் சஜ்தாக்களை நீக்கி விட்டான். அத்துடன், வானிலிருந்து தனக்கு இறை அறிவிப்பு வருவதாக அவன் கருதி வந்தான். கவிதை நடையிலான மெருகூட்டப்பட்ட சொற்களை இறை அறிவிப்பு என்று எடுத்து வைத்தான். அறியாமைக் காலத்தில் ஜோதிடர்கள் கவிதை நடையிலான மெருகூட்டப்பட்ட சொற்களை மக்களின் முன் எடுத்து வைத்து அவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தி வந்ததாக வரலாற்றிலிருந்து அறிய முடிகிறது. துலைஹாவும் ஜோதிடனாக இருந்தான். துலைஹா அஸதீ உடைய நஃப்ஸ் அவனை ஏமாற்றத்தில் ஆழ்த்தியிருந்தது.

அவனுடைய விவகாரம் சூடு பிடித்தது; அவனுடைய ஆற்றல் பெருகியது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அவனுடைய விவகாரம் குறித்து தகவல் கிடைத்த போது, ஸிரார் பின் அல் அஸ்வர் அஸதீ அவர்களை அவனைக் கொன்று வர அனுப்பினார்கள். ஆனால், ஸிராரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏனென்றால் காலம் செல்லச் செல்ல அவனுடைய ஆற்றல் அதிகரித்திருந்தது. குறிப்பாக, அஸத் மற்றும் ஃகத்ஃபான் ஆகிய இரு நட்புக் கோத்திரங்களும் அவன் மீது ஈமான் கொண்ட பிறகு அவனுடைய ஆற்றல் இன்னும் பெருகிவிட்டது. (அதன் பிறகு) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தது. துலைஹாவின் விவகாரம் தீர்க்கப்படாமல் இருந்தது. கிலாஃபத்தின் பொறுப்பு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கைகளில் வந்த போது, கிளர்ச்சியாளர்கள், முர்தத்கள் ஆகியோரை நசுக்குவதற்காக படையை ஆயத்தம் செய்தார்கள். படைத் தளபதிகளை நிர்ணயித்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களின் தலைமையில் படை புறப்பட்டது. அம்மக்கள் முர்தத்கள், பொய் நபித்துவ வாதிகளாக இருந்தது மட்டுமின்றி முஸ்லிம்கள் மீது போர் தொடுத்தும் வந்தனர்; முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சியும் செய்து வந்தனர்.

**உயய்னா பின் ஹிஸ்ன் என்பவன் யார்?**

இவன் மக்கா வெற்றிக்கு முன்பாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டான். ஹுனைன் போர் மற்றும் தாயிஃப் போர் ஆகியவற்றிலும் இவன் கலந்துகொண்டான். பிறகு, அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களுடைய காலகட்டத்தில் கிளர்ச்சியாளர்கள் மற்றும்

முர்தத்களுடன் சேர்ந்து மார்க்கத்தை விட்டு வெளியேறுதல் எனும் குழப்பத்தில் சிக்கி கொண்டான். மேலும், துலைஹாவின் பக்கம் ஈர்க்கப்பட்டு அவனிடம் பைஅத் செய்துவிட்டான். எவ்வாறிருப்பினும், பிறகு இஸ்லாத்தின் பக்கமும் திரும்பி வந்தான்.

அபஸ், ஸுப்யான் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் புஸாகா எனுமிடத்தில் ஒன்று கூடி விட்டனர். தய் கோத்திரத்தின் இரு கிளைகளான பனூ ஜதீலா மற்றும் ஃகவ்ஸ் ஆகியவற்றை உடனடியாக தன்னிடம் வரும்படி துலைஹா செய்தி அனுப்பினான். ஆகவே, அவ்வாறே நிகழ்ந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களை ஸுல்கஸ்ஸாவுக்கு வழி அனுப்பி வைப்பதற்கு முன்பு ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களிடம், நீங்கள் உங்களுடைய சமுதாயத்திடம், அதாவது, தய் கோத்திரத்திடம் அவர்கள் அழிந்து விடாதிருப்பதற்காக அவர்களிடம் செல்லுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் தன் சமுதாயத்திடம் வந்தார்கள். அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்தார்கள்; அவர்களுக்கு அச்சமூட்டினார்கள். அதற்கு அம்மக்கள், நாங்கள் அபுல் ஃபஸீலுக்கு (அதாவது, ஒட்டகக் குட்டியின் தந்தையே! என்று அழைத்து வந்தனர். சிலர் ஏளனம் செய்ய வேண்டும், இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இவ்வாறு அழைத்தனர்.) ஒருபோதும் கட்டுப்பட மாட்டோம் என்று கூறினர். இரக்கமற்ற முறையில் தாக்குதல் தொடுக்கக் கூடிய படை முன்னேறி வருவதைக் குறிக்கும், படுகொலைகள் நிகழப்போவதை குறித்தும், எவருக்கும் அடைக்கலம் கிடைக்கப் போகாமல் இருப்பதைக் குறித்தும் எச்சரித்த பிறகு, புரிய வைத்த பிறகு ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் மக்களைப் பார்த்து, அந்நேரத்தில் நீங்கள் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களை ஃபிஹ்லுல் அக்பர் (அதாவது, ஒவ்வொரு விலங்கினுடைய ஆண் வர்க்கம்) என்ற பட்டப் பெயரால் நினைவு கொள்வீர்கள் என்று கூறினார்கள். தய் சமுதாயத்தில் மக்கள் இவர்களின் பேச்சை கேட்டுவிட்டு, அப்படியா! நீங்கள் இந்த தாக்குதல் தொடுக்க வரும் படையைச் சென்று சந்தித்து அது எங்கள் மீது தாக்குதல் தொடுக்காமல் தடுங்கள். அந்நேரத்தில் புஸாகாவில் இருக்கும் எங்கள் இன மக்களை நாங்கள் திரும்ப அழைத்து விடுகிறோம். நாங்கள் துலைஹாவை எதிர்த்தால், அவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய எங்களுடைய மக்கள் அனைவரையும் அவன் கொன்று விடுவோ அல்லது அவர்களை பிணைக்கைதிகளாக சிறை பிடித்து விடுவோ சாத்தியம் உள்ளது என்றனர்.

ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்களிடமும் தன் சமுதாயமான 'தய்' மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட தகவலை கூறுவது பற்றியும் மேற்கூறப்பட்ட சம்பவங்களை எடுத்துரைத்தவாறும் ஓர் எழுத்தாளர் இவ்வாறு எழுதுகிறார்: இது ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களின் மாபெரும் பணியாக இருந்தது. அவர்கள் தம் சமுதாயத்தை இஸ்லாமிய படையில் இணையுமாறு அழைப்பு கொடுத்தார்கள்.

பனூ தய் உடைய படை காலித் (ரலி) அவர்களுடன் இணைந்தது எதிரிகளுக்கு முதல் தோல்வியாக இருந்தது. ஏனென்றால் அரேபிய தீபகற்பத்தில் அக்கோத்திரம் வலிமைமிக்க கோத்திரங்களுள் ஒன்றாக கருதப்பட்டது. அத்துடன், இதர கோத்திரங்கள் அதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வந்தன.

இதன் பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஜதீலா கோத்திரத்தை எதிர்கொள்வதற்காக அன்சர் ஐ நோக்கி முன்னேறினார்கள். இதைக் கண்ட ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம், தய் கோத்திரத்தின் உதாரணம் ஒரு பறவையைப் போன்றதாகும். ஜதீலா கோத்திரம், பனூ தய்யுடைய இரு சிறகுகளில்

ஒன்றாகும். தாங்கள் எனக்கு சில நாட்கள் அவகாசம் தாருங்கள். தய் கோத்திரத்தின் இன்னொரு கிளையான ஃகவ்ஸ் ஐ அல்லாஹ் வழிகேட்டிலிருந்து வெளியேற்றியது போன்று ஒருவேளை ஜதீலா கோத்திரத்தையும் நேரான வழியில் கொண்டு வரலாம் என்று கூறினார். ஆகவே, ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களின் தொடர்ச்சியான பேச்சுவார்த்தையின் காரணமாக அம்மக்களும் ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள். மேலும், ஹஸ்ரத் அதீ (ரலி) அவர்கள் ஜதீலா கோத்திரத்தின் ஓராயிரம் (குதிரை) வீரர்களுடன் முஸ்லிம்களிடம் வந்தார்கள்.

தய் கோத்திரம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் காலித் (ரலி) பின் வலீத் அவர்கள் துலைஹா அஸதீயை நோக்கி புறப்பட்டார்கள். அன்னார், ஹஸ்ரத் உக்காஷா (ரலி) பின் மிஹ்ஸன் மற்றும் ஹஸ்ரத் ஸாபித் (ரலி) பின் அக்ரம் ஆகியோரை எதிரியை உளவறிந்து வருவதற்காக முன்னால் அனுப்பினார்கள். ஆனால், எதிரிகள் அவ்விருவரையுமே ஷஹீதாக்கி விட்டார்கள். இந்த சூழ்நிலையின் காரணமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் துலைஹாவை எதிகொள்ள தன் படையை சீரமைக்க ஆரம்பித்தார்கள். புஸாகா எனுமிடத்தில் இருவரும் எதிர்கொண்டனர். மேலும், எதிரிகள் தோல்வியுற்றனர். துலைஹா தன் குதிரையில் புறப்பட்டதுடன் தன் மனைவியையும் புறப்படச் செய்தான்; அவளுடன் ஓடிவிட்டான். தன் தோழர்களைப் பார்த்து, உங்களுள் எவருக்கு இதற்கான ஆற்றல் இருக்குமோ அவர் போர்க்களத்தை விட்டு ஓடி விடட்டும் என்று கூறினான். ஓர் அறிவிப்பின் அடிப்படையில், துலைஹா போர்க்களத்தை விட்டு ஓடி நக்கா எனுமிடத்தில் பனூ கல்ப் சமுதாயத்திடத்தில் தங்கினான் என்றும் அங்கு சென்ற பிறகு இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டான் என்றும் வருகிறது.

பிறகு அல்லாஹ், பனூ ஃபுஸாரா மற்றும் துலைஹா ஆகியோரை முற்றிலும் தோல்வியடையச் செய்த போது, பனூ ஆமிர், சுலைம் மற்றும் ஹவாஸின் ஆகியோர், நாம் எந்த மார்க்கத்திலிருந்து வெளியேறினோமோ மீண்டும் அதிலேயே நுழைகிறோம் என்று கூறியவாறு வந்தனர். அவர்களாகவே வந்து இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டனர்.

முர்தத் ஆன நிலையில் எவர்கள் தங்களிடத்தில் வசித்து வந்த முஸ்லிம்களை தீயிட்டு கொளுத்தினார்களோ, முஸ்லிம்களின் சடலங்களை சிதைத்தார்களோ, முஸ்லிம்களின் மீது போர் தொடுத்தார்களோ அம்மக்களை முஸ்லிம்களின் பொறுப்பில் ஒப்படைக்காதவரை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பனூ ஆமிர், அஸத், ஃகத்ஃபான், ஹவாஸின், சுலைம் மற்றும் தய் ஆகிய கோத்திரங்களின் பைஅத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் இதன் விபரத்தை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்திலும் அனுப்பி வைத்தார்கள்.

இதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பதில் அளிக்கும் விதமாக, நீங்கள் எதையெல்லாம் செய்தீர்களோ அதற்கும், உங்களுக்குக் கிடைத்த வெற்றிக்கும் அல்லாஹ் உங்களுக்கு நற்கூலியை வழங்குவானாக! நீங்கள் உங்களுடைய எல்லா பணிகளிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்ளுங்கள்.

(திருக்குர்ஆன் 16: 129) اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّالَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். நீங்கள் அல்லாஹ்வின் பணியில் முழுமையாக முயற்சி செய்யுங்கள். சோம்பேறித்தனம் காட்ட வேண்டாம். எவர்கள் இறை கட்டளைக்கு மாறு செய்தார்களோ, இஸ்லாத்தின் எதிரியாக இருக்கிறார்களோ அவர்களைக் கொல்வதால் இஸ்லாத்திற்குப் பயன் ஏற்படும் என்றால், அவர்களைக் கொன்று விடலாம் என்று எழுதினார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஒரு மாதம்

**புஸாகாவில் தங்கியிருந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப குற்றவாளிகளுக்கு கடும் தண்டனைகளை கொடுத்தார்கள்.**

**ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பனூ ஆமிருடைய விவகாரத்தை விசாரித்து அவர்களிடம் பைஅத் வாங்கிய பிறகு உயய்னா பின் ஹிஸ்ன் மற்றும் குர்ரா பின் ஹுபைரா ஆகியோரை கைது செய்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடத்தில் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த இருவரையும் மன்னித்து விட்டார்கள். அவர்களுக்கு உயிர் பிச்சை வழங்கினார்கள்.**

*இறுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஸஃபர் எனுமிடத்திற்குச் சென்றது குறித்தும், புஸாகா எனுமிடத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடத்தில் தோல்வியுற்ற ஃகத்ஃபான், தய், சுலைம் மற்றும் ஹவாஸின் ஆகிய கோத்திரத்தார்களில் சிலரை உம்மே ஸிமல் சல்மா பின்த் மாலிக் பின்த் ஹுதைஃபா எனும் பெண்மணி அவர்களின் தோல்வியைச் சுட்டிக் காட்டி அவர்களை ஆவேசம் கொள்ளச் செய்து, அத்துடன் தாமே பல்வேறு கோத்திரங்களில் மீண்டும் மீண்டும் சுற்றுப் பயணம் செய்து போருக்காக தூண்டி விட்ட குறிப்பையும் எடுத்துரைத்தார்கள். அப்பெண்ணுடன் கடும் போர் நடைபெற்றது. அதில் உம்மே ஸிமல் கொல்லப்பட்டாள். அவளுடன் போரிட்டவர்கள் உணர்விழந்து தப்பி ஓடினார்கள். இதனுடைய விபரங்களை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:* **இவ்வாறு இந்தக் குழப்பத்தின் நெருப்பு தணிந்தது. அரேபிய தீபகற்பத்தின் வடகிழக்கு பகுதியில் மார்க்கத்தை விட்டு வெளியேறுதல் மற்றும் கிளர்ச்சி ஆகியவை முடிவுக்கு வந்தன.**

**இந்த நற்குறிப்பு இனிவரும் காலத்திலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தொடர்பாக எடுத்துரைக்கப்படும் இன்ஷா அல்லாஹ்! தற்போது இந்த அளவுக்கு மட்டுமே போதுமானது!**

*ஹுஸூர் அவர்கள் இரண்டாம் குத்பாவுக்கு முன்னர் சியால்கோட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மத் பட் சாஹிபின் மனைவியாகிய மதிப்பிற்குரிய ஸாபிரா பேகம் சாஹிபா மற்றும் தற்போது கனடாவில் வசிக்கும் மதிப்பிற்குரிய ரஷீத் அஹ்மத் சாஹிபின் மனைவியாகிய மதிப்பிற்குரிய சுரைய்யா ரஷீத் சாஹிபா ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا

مَن یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ

رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ

تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**